வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 5.9.2025 நேரம் மாலை 6.10 மணி

------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கல்வி, தனிநபர்களுக்கு கண்ணியம் மற்றும் பாதுகாப்பு அளிப்பதாகவும், அதை கற்பிக்கும் ஆசிரியர்களை தாம் வாழ்த்துவதாகவும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.
- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் அடுத்த தலைமுறையினருக்கு மிகப் பெரிய மாற்றத்தையும், அடித்தளத்தையும் அமைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- இந்தியாவின் முதல் சுதேசி கப்பல் நிறுவனத்தை நிறுவியவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ சிதம்பரனார் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் புகழாரம் சூட்டி உள்ளார்.
- ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மூலம் மருத்துவக் காப்பீட்டு வரி முற்றிலும் நீக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் ஏழை மக்கள் பெரிதும் பயன் பெறுவர் என்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம் கூறி உள்ளார்.

<u>ஆசிரியர் தினம்</u>

நாடு முழுவதும் இன்று ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, தலைவர்கள், ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து உள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று புதுடெல்லியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பங்கேற்று, தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 45 ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கி கவுரவித்தார். முன்னதாக, முன்னாள் குடியரசு

தலைவர் சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணனின் திருவுருவப் படத்திற்கு அவர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த விருது வழங்கும் விழாவில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, மேலும் பேசுகையில்............

## ஆசிரியர் தினம்

முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த தினமான செப்டம்பர் 5-ஆம் தேதி ஆண்டு தோறும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை ஒட்டி, புதுடெல்லி விஞ்ஞான் பவனில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கலந்து கொண்டு 45 பேருக்கு தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், மகளிர் சக்தியை மேம்படுத்த பெண் குழந்தைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவது குறித்து வலியுறுத்தினார். பெண்குழந்தைகளின் கல்வியில் முதலீடு செய்வது குடும்பங்கள், சமூகம், மற்றும் தேசத்தின் வளர்ச்சிக்கு விலை மதிப்பற்ற பங்களிப்பை வழங்குகிறது என்றும், உயர்கல்வியில் பெண்களின் சேர்க்கை விகிதம் கடந்த சில ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க உயர்வை எட்டி உள்ளது என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார். கல்வி, தனிநபர்களுக்கு கண்ணியம் மற்றும் பாதுகாப்பு அளிப்பதாகவும், நலிந்த பின்னணியை சேர்ந்த குழந்தைகள் முன்னேற்றம் அடைய உதவுவதாகவும் அவர் கூறினார். மேலும் தேசிய கல்விக் கொள்கை 2020 மூலம், பள்ளிக் கல்வி முறை தடையற்றதாகவும், எளிமை படுத்தப்பட்டுள்ளதாகவும் திருமதி திரவுபதி முர்மு குறிப்பிட்டார்.

## ஆசிரியர் தினம்

அனைத்து பள்ளிகளிலும் சுதேசி தினம் மற்றும் சுதேசி வாரம் போன்ற நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் கொண்டாடப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார். புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் உரையாற்றிய அவர், தேசத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு ஒரு உந்து சக்தியாக திகழ்கிறது என்றும், ஆசிரியர்களை கவுரவிப்பது அவர்களின் வாழ்நாள் அர்ப்பணிப்புக்கான அங்கீகாரம் என்றும் பாராட்டினார்.

ஆசிரியர்களின் அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும், மாணவர்களின் வாழ்க்கையை ஒளிரச் செய்வதாக மத்திய கல்வித் துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார். மாணவர்களின் திறன் மற்றும் வாழ்வை மேம்படுத்தும் வகையில் எழுத்தறிவை கற்றுத் தருவதோடு நாட்டின் பொறுப்பு மிக்க குடிமக்களாக அவர்களை உருவாக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் வணக்கம் செலுத்துவதாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## ஓணம்

மலையாள மொழி பேசும் மக்களின் வசந்த விழாவான ஓணம் பண்டிகை இன்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஓணம் பண்டிகையை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். கேரள மாநிலத்தின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் நல்லிணக்கத்தின் முக்கியத் துவத்தை இந்த பண்டிகை நினைவூட்டுகிறது என்று குடியரசு தலைவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். ஓணம் பண்டிகை அனைவருக்கும் மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம் மற்றும் செழிப்பை கொண்டு வரும் என்று தாம் நம்புவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*__மிலாது நபி__*

நபிகள் நாயகத்தின் பிறந்த நாளான இன்று மிலாது நபி கொண்டாடப்படுகிறது. நாட்டு மக்கள் சமூகத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்க நபிகள் நாயகத்தின் போதனைகள் அனைவரையும் ஊக்குவிப்பதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். இந்நாளை ஒட்டி நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு தர்க்காக்களில் சிறப்பு தொழுகை நடைபெற்றன.

*__வ.உ.சிதம்பரனார்__*

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 154-ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி குடியரசு தலைவர் மாளிகையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தூத்துக்குடி துறைமுக வளாகத்தில் உள்ள சிதம்பரனாரின் திருவுருவச் சிலைக்கு மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் இந்த துறைமுகத்தில் 10-ஆவது சரக்கு தளம் அமைத்தல், துணை மின் நிலையம், காற்றாலை அமைத்தல், நான்கு வழிச் சாலை, கடல்சார் அருங்காட்சியகம் உள்ளிட்ட 250 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். இந்தியாவின் முதல் சுதேசி கப்பல் நிறுவனத்தை நிறுவியவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ சிதம்பரனார் என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தமது சமூக ஊடகப் பதிவில் புகழாரம் சூட்டி உள்ளார்.

நாட்டுப் பற்றுக்கு இலக்கணமாகவும், தியாக வாழ்வுக்கான எடுத்துக் காட்டாகவும் வ.உ சிதம்பரனார் திகழ்ந்தார் என்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டு உள்ளார்.

புதுச்சேரி பாரதி பூங்காவில் உள்ள வ.உ சிதம்பரனாரின் திருவுருவச் சிலைக்கு அரசு சார்பில் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஜிஎஸ்டி

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். கடந்த 3-ஆம் தேதி அறிவிக்கப்பட்ட இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் அடுத்த தலைமுறையினருக்கு மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்றும், இந்த நடைமுறை நவராத்திரியின் முதல் நாளான செப்டம்பர் 22- ஆம் தேதி அமலுக்கு வருவதாகவும் அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் நாட்டு மக்களின் நுகர்வை மேம்படுத்தும் என்றும் அது மூலதன செலவினங்களை பாதிக்காது என்றும், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார். தனியார் தொலைகாட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்த அவர், அமெரிக்க அரசின் 50 சதவிகித வரிகளால் பாதிக்கப்படும் ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

மறைமுக வரி முறையை, 5 சதவிகிதம், 12 சதவிகிதம், 19 சதவிகிதம் மற்றும் 28 சதவிகிதம் என நான்கு அடுக்கு அமைப்பில் இருந்து, 5 சதவிகிதம் மற்றும் 18 சதவிகிதம் என 2 அடுக்கு கட்டமைப்பாக ஜிஎஸ்டி கவுன்சில் எளிமைப்படுத்தி உள்ளது குறிப்பிடத் தக்கது. இந்த ஜிஎஸ்டி கவுன்சிலின் முடிவு பெற்றோர்களின் நிதிச் சுமையை குறைக்கும் என்றும், மாணவர்கள் மற்றும் கல்விப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி சீர்திருத்தம்

பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் மத்திய கல்வித் துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் வரலாற்று சிறப்பு மிக்கவை என்று பிஜேபியின் மூத்த தலைவரும், மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சருமான திரு பியூஷ்கோயல் கூறி உள்ளார். புதுடெல்லியில் இன்று கட்சி தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் நாட்டின் நுகர்வோருக்கு குறிப்பிடத் தக்க நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இது வணிகம் செய்வதை எளிதாக்கி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

<u>புதுச்சேரி-செல்வம்</u>

புதுச்சேரி சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், இன்று செய்தியாளர் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெற்ற இந்த செய்தியாளர் கூட்டத்தில் 2014-ஆம் ஆண்டு பிரதமர் திரு மோடி பதவி ஏற்றதும், வரி சீர்திருத்தம் செய்த போது எதிர்கட்சிகள் கடுமையாக விமர்சித்ததாக கூறினார். இந்நிலையில் 4 பிரிவுகளாக இருந்த ஜிஎஸ்டி வரி 2 பிரிவுகளாக மாற்றப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், மருத்துவக் காப்பீட்டு வரி முற்றிலும் நீக்கப்பட்டுள்ளதையும், இதன் மூலம் ஏழை மக்கள் பெரிதும் பயன் பெறுவர் என்றும் கூறினார்.

<u>புதுச்சேரி-தெரசா</u>

பாரத ரத்னா அன்னை தெரசாவின் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி, புதுச்சேரி பாரதி பூங்காவில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற

உறுப்பினர்கள் திரு பாஸ்கர், திரு லட்சுமிகாந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

<u>வெள்ளம்</u>

நாடு முழுவதும் இயற்கை பேரிடர்களின் போது மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களின் பங்களிப்பை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பாராட்டி உள்ளார். இயற்கை பேரிடர்களான மேக வெடிப்புகளும், சமவெளிகளில் ஏற்படும் வெள்ளமும் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி உள்ளது குறித்து அவர் வேதனை தெரிவித்துள்ளார். மேலும் உத்தராகண்ட், இமாச்சல பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், அசாம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட இயற்கை பேரிடர்கள் பெரும் உயிரிழப்புகளையும், அழிவையும் ஏற்படுத்தி உள்ளதாக குடியரசு தலைவர் கூறினார். பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் துக்கத்தை நாடு பகிர்ந்து கொள்கிறது என்றும், இந்த நெருக்கடியான நேரத்தில் அவர்களுக்கு நாட்டு மக்கள் துணை நிற்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

*<u>உக்ரைன்-ரஷ்யா</u>*

உக்ரைன்-ரஷ்யா நாடுகளுக்கு இடையேயான மோதல் முடிவிற்கு வருவதையே இந்தியா விரும்புகிறது என்று ஐ நா-விற்கான நிரந்தர பிரதிநிதி திரு ஹரீஷ் தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் திரு டொல்ட் டிரம்ப், மற்றும் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் இடையே கடந்த 15-ஆம் தேதி அலாஸ்காவில் நடைபெற்ற உச்சி மாநாட்டின் போது இந்த விவகாரம் முன்னேற்றம் அடைந்து வருவது குறித்து இந்தியா மகிழ்ச்சி அடைவதாக ஐ நா பொதுச் சபையில் உரையாற்றிய திரு ஹரீஷ் கூறினார். மேலும் உக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி, ரஷ்ய அதிபர், ஐரோப்பிய நாட்டு தலைவர்கள் உடன் திரு நரேந்திர மோடி பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.